"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4:12)

தேவ எக்காளம்

(ஓர் தாயும், மகனும் முழங்காலூன்றித் தேவனை நோக்கி ஜெபிக்கும் பவித்திரமான காட்சியை ஓர் சித்திரத்தில் ஆசிரியர் காண்கின்றார். அதைக் கண்ணுறும் அவரின் தாழ்மையான கற்பனை பழைய ஏற்பாட்டின் காலத்தில் நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சியினுள் செல்லுகின்றது. சற்று நேரத்திற்குள்ளாக ஜெபத்துடன் ஒரு செய்தி பிறக்கின்றது. அன்புடன் தொடர்ந்து வாசித்துத் தேவாசீர்வாதம் பெற்றுக்கொள்ளுங்கள்).

என் **அருமை மகனே,**

எனக்கு முன்பாக முழங்காலூன்றியிருக்கும் உன்னைக் காண்கையில் ஒரு தேவ தூதனை நான் காண்பதைப் போன்றிருக்கின்றது. இப்பொழுது என் உள்ளம் தேவசமாதானத்தால் நிரம்பி வழிகின்றது.

சில ஆண்டு காலத்திற்கு முன்னர் என் இருதயம் கிலேசத்தால் மூடப்பட்டுக் கண்ணீருக்குள் அமிழ்ந்து கிடந்தது. நான் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டுச் சிறுமைப் படுத்தப்பட்டேன். உன் தகப்பனின் இரண்டாம் மனைவி என்னை அடிக்கடி மனமடிவாகப் பேசினாள். "பிள்ளையற்ற மலடியே, என் புருஷன் வீட்டில் உனக்குப் பங்குமில்லை, பாகமுமில்லை. வீட்டைவிட்டு எங்கேயாவது தொலைந்து போ. இதோ பார், என் புருஷனின் சுதந்திரமும், காணியாட்சிகளும் எனக்கும், என் கர்ப்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பப் பிறப்புகளுக்குமே உரியது'' என்று நான் மனமடிந்து சாகத்தக்க விதமாகப் பேசிவிடுவாள். அப்பொழுது, நான் அவளிடம் சண்டையிடாமல் துக்கத்தால் நெஞ்சடைத்து அழுதுகொண்டேயிருப்பேன்.

இதில் சந்தோஷத்திற்குரிய ஒரு பெரிய காரியம் யாதெனில், உன் அன்புள்ள தகப்பனுர் என்னை அதிகமதிகமாக நேசித்தார் என்பதுதான். நான் ஏங்கி, ஏங்கி அழுவதைக் கண்டால் அவர் உள்ளம் உருகிவிடும். உடனே, அவர் என்னண்டை வந்து என்னை ஆற்றித்தேற்றி மகிழ்ச்சியடையச் செய்துவிடுவார். இருப்பினும், என் உள்ளம் எனக்குள் நாளுக்கு நாள் விசாரமடைந்து கொண்டே வந்தது.

மலடி............மலடி............மலடி என்று என் சக்களத்தி அடிக்கடி கூறின வார்த்தைகள் என் காதுகளில் தொனித்துக் கொண்டேயிருந்தன. காலையிலும், மாலையிலும், எல்லா நேரங்களிலும் என் உள்ளம் இவ்வார்த்தைகளால் கலக்கமுற்றது. நான் மலடி......... நான் பிள்ளையற்றவள்.........காலமெல்லாம் ஒரு பிள்ளையற்றவளாய் வாழவேண்டிய அவலநிலை......... ஐயோ நான் என் செய்வேன்? இப்படி நான் அங்கலாய்ப்புற்ற போதினும் என் இருதயத்தின் அடித்தளத்தில் ஒரு அசையா நம்பிக்கையும், தேவன்மேல் உறுதியான விசுவாசமும் தேங்கிக் கிடந்தது.

நான் மலடியா? என் வயிற்றில் இனி ஒரு குழந்தைகூட ஒருக்காலும் பிறக்காதா? காலமெல்லாம் மலடியாக வாழ்ந்தா நான் மரிப்பேன்? நான் அள்ளி எடுத்து, வாரி அணைத்துக் கொஞ்சிட ஓர் குழந்தை பாக்கியம் எனக்கினி கிடையாதோ? இதுதான் என் முடிவா? இல்லை, இல்லவே இல்லை. கர்த்தர் நல்லவர். அவரிடம் சென்று என் தேவையைச் சொல்லி, என் கவலையை அவர் பாதத்தில் ஊற்றுவேன். அப்பொழுது அவர் எனக்கு இரங்குவார். என் கண்ணீரைத் துடைப்பார். ஏற்ற காலத்தில் என்னைப் பிள்ளைத் தாழ்ச்சியுள்ளவளாக்குவார் என்று என்னை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

நாட்கள் அநேகம் கடந்து சென்றன. வருஷந்தோறும் நாங்கள் செல்லுகிற வழக்கத்தின்படி சீலோவிற்குத் தேவனைத் தொழுதுகொள்ளச் சென்றோம். உன் அப்பாவும், நானும், என் சக்களத்தியும் அவள் பிள்ளைகளுமாகப் புறப்பட்டோம். சக்களத்தித் தனது பிள்ளைகளைக் குறித்து மனமேட்டிமையுற்றுக் கர்வங்கொண்டவளாக அடிக்கடி என்னை அருவருப்புடன் உற்றுநோக்கியவாறே சென்றுகொண்டிருந்தாள். அவள் இப்படிச் செய்துகொண்டு வந்தது என் இருதயத்தை ஈட்டியால் ஊடுருவக் குத்துவதைப் போன்றிருந்தது. சீலோவிலும் என் சக்களத்தி நான் மனமடிந்து போகத்தக்கவிதமாய்ப் பேசி என்னைக் கண்ணீர் விட்டுக் கதறிடப் பண்ணினாள். என் இருதயத்தின் வியாகுலங்கள் இப்பொழுது கரை கடந்து சென்றது. என் துயரப் பெருமூச்சை என்னால் அடக்கிக்கொள்ள முடியவில்லை. நான் மனங்கசந்து சத்தமிட்டு அழதேன். உன் அப்பா என்னிடம் வந்து உருக்கமான வார்த்தைகளால் என்னை ஆற்றித்தேற்றினார்கள். ஆயினும், என் இருதயத்தின் கவலையை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கவலை நிறைந்த என் இதயத்தைக் கர்த்தாவின் சமுகத்தில் உடைத்து ஊற்றச் சீலோவாம் தேவாலயத்தை நோக்கிப் பைத்தியம் பிடித்தவளைப்போல ஓடோடிச்

(23-ம் பக்கம் பார்க்க)

கர்த்தரில் பிரியமானவர்களே,

நம்முடைய அருமை நேசரும், நாம் ஆவலோடு நாடிச்சென்று கொண்டிருக்கின்ற பரம கானானின் ஜீவாதிபதியான கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நம் பரிசுத்த இரட்சகரின் இனிமையான நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.

தேவன் சிருஷ்டித்த அழகான மலைகள், அவைகளில் வானளாவ உயர்ந்து நிற்கும் உயரமான மரங்கள், மலைகளில் தாவிக் குதித்தோடிக் கொண்டிருக்கும் சிற்றோடைகள், கண்ணுக்கினிய புல் வெளிகள், மலைகளுக்குரிய வன விலங்குகள், வானவீதியில் வட்டமிட்டுப் பறக்கும் வண்ணப் பறவைகள் போன்ற இயற்கை வனப்புகள் நிறைந்த நீலகிரி மலைகளிலிருந்து எக்காளம் பிரதி மாதமும் உங்கள் கரங்களை வந்தடைகின்றது. தேவனின் அற்புத சிருஷ்டிப்பாகிய இவ்வழகிய மலைகளிலிருந்து இப் பத்திரிக்கையைப் பிரதி மாதமும் விருத்தியான ஜெபத்தோடும், ஆத்தும பாரத்தோடும் உங்களுக்கு அனுப்புகின்றேன்.

மாதந்தோறும் உங்கள் அன்பின் இல்லங்களை நோக்கி விரைந்து ஓடிவரும் இச்சிறிய ஏடு உங்களிடம் சுமந்து வரும் ஒரே ஒரு முக்கிய செய்தி "உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு" என்பதுதான். பத்திரிக்கையின் முகப்பு அட்டையின் உச்சியிலும், பத்திரிக்கையைச் சுற்றியிருக்கும் உறையிலும் (Wrapper) இந்த வார்த்தையைத்தான் ஒவ்வொரு மாதமும் நீங்கள் காண்கின்றீர்கள். பத்திரிக்கை வந்தது, ஏதோதானேயென்று பிரித்து வாசித்து அதன் பின்னர் வீசி எறிந்துவிட்டுச் சென்றோம் என்ற நிலை ஒருக்காலும் வேண்டாம். உங்கள் விலை மதிப்பிடற்கரிய ஆத்துமாவோடு விளையாட எக்காலத்தும் துணிய வேண்டாம். அசுத்தத்துடன் நீங்கள் விளையாடினால் உங்கள் சரீரம் அசுசியாகும். நிலக்கீலுடன் நீங்கள் விளையாடினால் உங்கள் சரீரத்தில் கறைகள் ஏற்படும். கூர்மையான ஆயுதங்களுடன் நீங்கள் விளையாடினால் உங்கள் சரீரத்தில் கொடிய காயங்கள் தோன்றும். நெருப்போடு விளையாடினால் தீக்காயங்களை நீங்களே உங்களுக்கு வருவித்துக் கொள்ளுவீர்கள். ஆனால், உங்கள் விலைமதிப்பிடற்கரிய ஆத்துமாவோடு ஞானமற்று விளையாடினால் முடிவில் நடப்பது என்ன தெரியுமா? அந்த விளையாட்டின் பிரதிபலனாக உங்களது முடிவில்லா நித்தியத்தையே அவியாத அக்கினிக் கடலுக்கு நீங்கள் பணயம் வைக்க நேரிடும்

ஆகவேதான் தேவன் இதைக் குறித்து எச்சரிக்கையில் "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்" என்றார்.

முடிவில்லாத நித்தியம், அவியாத அக்கினிக் கடல் இந்த இரண்டு காரியங்களும் என்றும் உங்கள் கண்களை விட்டு நீங்காதிருக்கட்டும்.

இக்கிருபையின் காலத்தில் நீங்கள் மனந்திரும்பித் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படுங்கள் இரட்சிப்பின் காரியத்தை ஒருக்காலும் தள்ளிப்போட்டுக்கொண்டு செல்லாதேயுங்கள்.

நேற்றையத்தினம் டங்கன் மேதிசன் என்ற ஒருவரின் மனந்திரும் புதலைக் குறித்து நான் ஒரு புத்தகத்தில் வாசித்துக்கொண்டிருந்தேன். அதின் தமிழாக்கத்தை உங்கள் ஆன்ம நலனுக்காகக் கீழே தருகின் றேன் :-

" கர்த்தரால் கனப்படுத்தப்பட்டவரும், அவரால் பயன்படுத்தப்பட்ட வரும், எண்ணற்ற ஆத்துமாக்களைக் கர்த்தரிடம் வழி நடத்திய டங்கன் மேதிசன் என்பவர் தேவனை நோக்கி அடிக்கடி ஜெபித்த ஜெபம் இதுவே தான் :-

" ஓ ஆண்டவரே, முடிவில்லா நித்தியத்தை என் கண்மணிகளில் முத்திரையாகப் பதித்து விடும்" டங்கன் மனந்திரும்பிய சரிதம் பின் வருமாறு சித்தரிக்கப்பட்டுள்ளது :

" ஒருநாள் டாக்டர் A. A. போனர் என்பவர் யாத்திராகமம் 34:6,7 வசனங்களின் பேரில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். "...... குற்ற வாளியைக் குற்றமற்றவனாக விடாமல் ......" என்ற வார்த்தைகளைக் கேட்ட டங்கன் தனது ஆவிக்குரிய மாற்றத்தைக் குறித்துக் கீழ்க்கண்ட வாறு குறிப்பிடுகின்றார் :-

" பட்சிக்கிற அக்கினியானதும், ஊடுருவுவதுமான சர்வ வல்லவரின் கண்கள் என்மேல் நோக்கமாயிருப்பதை நான் உணர்ந்தேன். மலை போன்ற தேவ கோபாக்கினை என்னைக் கீழே தள்ளித் தரையோடு நசுக் குவதைப் போன்ற உணர்வும், அவியாத நித்திய அக்கினிக் கடல் என் பாதங்களின் கீழ்த் தன் வாயைத் திறந்து கொண்டிருக்கின்ற பயங்க ரக் காட்சியும் என்னை நடுக்கமுறச் செய்தது. மகா பயங்கரமாக முழங் குகின்ற இடிகளின் ஓசையை விடப் பல மடங்கு ஓசையுடன் "குற்ற வாளியைக் குற்றமற்றவனாக விடாமல்" என்ற தேவ வார்த்தைகளை நான் கேட்டேன்.

போனரின் பிரசங்கத்தைக் கேட்கக் கூடிவந்த அனைவரும் முடிவில் கலைந்து சென்றனர். ஆனால், நான் மட்டும் இருந்த இடத்தில் அப்ப டியே உட்கார்ந்து கொண்டிருந்தேன். நான் பைத்தியக்காரனைப்போல் அப்படியே உட்கார்ந்திருப்பதைக் கண்ட மற்ற மக்கள் மிகவும் அனுதா பத்துடன் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டே சென்றனர்.

கடைசியாக, நான் எனது இருப்பிடத்திலிருந்து எழும்பி வீட்டிற்குச் செல்ல ஆரம்பித்தேன். தேவன், மோட்சம், நரகம், நியாயத்தீர்ப்பு, நித்தியம் போன்ற வார்த்தைகளின் ஜீவனுள்ள தார்ப்பரியத்தையும் அவற்றின் பயங்கரத்தையும் உணர்ந்தவனாகச் சென்று கொண்டிருந் தேன். என்னைச் சுற்றிலும் மக்கள், கூட்டம், கூட்டமாகச் சென்று கொண்டிருந்தனர். மனந்திரும்பாமல் நித்தியத்தை நோக்கி அவர்கள் விரைந்து கொண்டிருந்தனர். நித்தியத்தைக் குறித்து நடு, நடுங்கி வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த என் நிலையை அவர்கள் காண்பார் களானால் உண்மையில் சிரிக்கத்தான் செய்வார்கள். தூக்குத்தண்டனை பெற்றக் கொலைபாதகன், தான் தூக்குண்டு மரிக்கப்போகும் தூக்கு

மேடையில் நடனமாடிக் கொண்டிருப்பதைப் போன்ற பரிதாபக் காட்சியே அவர்களைக் காண்கையில் எனக்கும் வந்தது. பரலோகம் இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்தது. நான் எங்கெங்கே சென்றாலும் தேவனின் ஜுவாலித்து எரிகின்ற அக்கினிமயமான கண்களும், அவருடைய ஜீவனுள்ள வார்த்தைகளும் என்னை எச்சரிப்பதைக் கண்டேன். சரமாரியாகக் குண்டுகளைப் பொழியும் யுத்த ஏவுகணைகள் என்னைத் தாக்குவதைப் போன்ற நடுக்கமும், திகிலும் என்னைப் பிடித்தது. நான் எந்த நிமிஷத்திலும் நரகத்தின் படுபாதாளத்தில் விழுவேன் என்ற பயம் என்னை ஆட்கொண்டது.

கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. இறுதியில் தேவன் என்னைச் சந்தித்தார். யோவான் 3:16 வசனத்தின் மூலம் தேவனின் சொல்லிமுடியாத சந்தோஷத்தையும்,சமாதானத்தையும் நான் பெற்றுக்கொண்டேன்".

அன்பானவனே, டங்கன் மேதிசனைப்போல நீ உன் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளும்வரை அமர்ந்திராதே. நித்தியத்தைக் குறித்து ஏனோதானோவென்றுமிராதே கர்த்தர்தாமே உன்னை நீதியின் பாதையில் வழி நடத்துவாராக. ஆமென்.

கர்த்தர் வருகிறார். N. சாமுவேல்

இரு வித மரணக் கட்டில்கள்!

(தேவனற்ற நிலையில் பாவத்தில் மரிக்கும் பாவி படுத்திருக்கும் மரணக் கட்டில் — தனது பாவங்கள் தேவகுமாரனாகிய இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் கழுவப்பட்டுப் பரிசுத்தமாய் ஜீவித்துக் கர்த்தரில் மரிக்கும் பரிசுத்தவானின் மரணக் கட்டில். ஆக இரண்டு விதமான மரணக் கட்டில்கள். இரு கட்டில்களிலிருந்தும் மூச்சொடுங்குமுன் இறுதிக் குரல்கள் எழும்புகின்றன! ஒரு மனிதனின் குரல் நம்மை நடுக்கமுறச் செய்கின்றது. பிறிதொரு மனிதனின் குரல் நம் இருதயத்தைக் களிப்பூட்டுகின்றது. ஒரு நாளில், நானும் நீங்களும் மேற்கண்ட மரணக்கட்டில்கள் இரண்டில் ஏதாவதொன்றில் படுத்திருப்போம் என்பதை மறக்க வேண்டாம். நீ எந்தக் கட்டிலைத் தெரிந்து கொள்ளுவாய்? காலா காலங்களில் தங்கள் மரணக்கட்டில்களில் படுத்திருந்த இரு சாரார் எழுப்பிய இறுதிக் குரல்களில் சிலவற்றைக் கீழே நாம் காணலாம். -பத்)

பரிசுத்தவான்கள்

"எனது இரதம் வந்துவிட்டது.
நான் அதில் ஏற ஆயத்தமே"

— ஜோர்டன் ஆண்டி.

"மகிமையுள்ள சமுத்திரத்தைப் போன்று முடிவில்லா நித்தியம் என் முன்னர் அலைவீசி ஆடிக் கொண்டிருக்கின்றது."

— மார்க்கி ரெட்பிசியர்.

"எத்தனை ஜோதிமயமாக என் அறை ஜொலிக்கின்றது! எத்தனை திரள்கூட்டம் தேவதூதர்கள்!" —மார்த்தா மெக்கிரேக்கின்.

"சிறப்பாக எழுதும் தேவ வரத்தை நான் இப்பொழுது வாஞ்சிக்கின்றேன். ஏனெனில், மரிப்பது எத்தனை இனிமையானது என்பதனை வர்ணித்து எழுத விரும்புகின்றேன்" —டாக்டர் கலன்.

"கிறிஸ்து பெருமானின் திரு இரத்தப் புண்ணியத்தால் நான் பூரண சமாதானத்துடன் இளைப்பாறிக் கொண்டிருக்கின்றேன். தேவனின் ஆனந்த பாக்கியம் நிறைந்த சமுகத்தினுட்செல்ல இதுவே போதுமானது என்று காண்கின்றேன்" —டேராட்டர்.

"ஆ! நான் எவ்விதமான மனமகிழ்ச்சியை உடையவனாயிருக்கின்றேன். என்பதனை உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். தேவன் தமது பூரண மகிமையுடன் என் இதயத்தில் பிரகாசிக்கின்றார். கர்த்தர் வருகிறார்! கர்த்தர் வருகிறார்!! — Mrs. மேரி பிரான்சிஸ்.

"இது என் மரணமாயிருக்குமா? அப்படியானால், வாழ்வைவிட இதுவேதான் சிறந்தது. கர்த்தரில் மா மகிழ்ச்சியுடன் நான் மரணமடைந்ததாக என் நண்பர்களிடம் கூறுங்கள்" —ஆர்தர் வித்.

"சூரியன் அஸ்தமிக்கின்றது. எனது சூரியன் அருணோதயக் கதிர்களுடன் உதயமாகின்றது. எனது படுக்கையிலிருந்து சிங்காசனத்திற்குச் சென்றுகொண்டிருக்கின்றேன். விடைகொடுங்கள், போகிறேன்."
S. B. பாங்கஸ்.

பாவிகள்.

"ஆக்கினைக்குட்படுத்தப்பட்டவர்கள் அடையும் தேவ கோபாக்கினையின் துயரத்தை அனுபவிக்கின்றேன்" —டேவிரான்ட்.

"முடிவற்ற நித்தியத்தை நினையாதிருக்க என் சிந்தையை மயக்கமடையச்செய்யும் சாராயக் கலப்புள்ள அபினியை எனக்குக் கொடுங்கள்."
—MIRABEAU.

"தேவனாலும், மனிதராலும் நான் கைவிடப்பட்டு விட்டேன். நான் நரகத்திற்கே செல்லுவேன். ஓ, கிறிஸ்துவே! ஓ, இயேசு கிறிஸ்துவே!"
— வால்டேர்

"எத்தனை திரளாய் இரத்தத்தைக் கொட்டினேன்! எத்தனை கொலைகளைச் செய்தேன்! எத்தனை தீய ஆலோசனைகளைப் பின்பற்றினேன். நான் என் ஜீவனை நஷ்டப்படுத்திவிட்டேன். நான் அதனைத் தெளிவாகக் காண்கின்றேன்"
— சார்லஸ் IX
பிரான்ஸ் தேச அரசன்.

"தேவனே எனக்கு உதவி செய்யும். கிறிஸ்துவே எனக்கு உதவி செய்யும். என்னோடு தங்கியிரும். நான் தனித்து விடப்படுவேனானால் அது நரகமாகும்"
— டாம் பெயின்

"தேவனுடைய இரக்கத்தையும், அவருடைய பட்சத்தையும் திரும்பப் பெற்றுக்கொள்ளவும், அவரோடு மீண்டும் எனது ஐக்கியமேற்

படுத்திக் கொள்ளவும் ஓராயிரம் ஆண்டுகள் அவியாத அக்கினியின்மேல்
நான் படுப்பதே அதின் விலைக் கிரயமானால் மட்டற்ற மகிழ்ச்சியுடன்
அவ்வாறு செய்வேன்! ஆனால், அந்தோ அது என் பகற்கனவு! கோடானு
கோடி வருஷங்களும்கூட நான் அழுந்திக் கொண்டிருக்கப்போகும் எல்லை
யற்ற துயரத்திற்கு ஒரு முடிவைக் கொண்டுவரப் போவதில்லை. என்
றும் சதாகாலமும் நிலைத்து நிற்கும் நித்தியமே, ஐயோ நித்தியமே!
ஓ, சகிக்க முடியாத கடும் வேதனை நிரம்பிய நரகமே!"

— பிரான்சிஸ் நியூபோர்ட்

ஜெப வரம்

ஜெபத்தைக் கேட்கிற ஜீவனுள்ள தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு
இன்றும் என்றும் சதாகாலங்களிலும் எல்லா துதியும், எல்லா கனமும்,
எல்லா மகிமையும் உண்டாவதாக. ஆமென். ஆமென்.

ஜெபம் என்பது பூலோகத்தில் உள்ள பாவியான ஒருவன் அல்லது
ஒருத்தி பரலோகத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள ஒரு வழி
யாகும். ஜெபம் வல்லமையுள்ளது (Prayer is Power) படித்தவர்கள்
மாத்திரமல்ல, படிக்காதவர்களும் நன்றாக ஜெபிகக்லாம். பெரியவர்கள்
மாத்திரமல்ல சிறுவர்களும் கூட நன்றாக ஜெபிக்கலாம். உனக்கு வேறு
எந்த வரம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்த "ஜெப வரம்"
தேவை என்பதை நீ அறிந்து இன்று முதல் நீ ஓர் ஜெப வீரனாக,
ஜெபிக்கும் தாயாக மாற வேண்டும் என்பதற்காக இச்செய்தியைப் பரி
சுத்தாவியின் ஒத்தாசையைக் கொண்டு எழுதுகிறேன்.

"ஜெபிக்கிறவன் ஜெயம் பெறுவான்" ஜெபசிந்தை உள்ளவன் பாவம்
செய்யமாட்டான். அதேபோல் ஜெபசிந்தையில்லாதவன் பாவம் செய்கி
றவனாக இருக்கிறான். "ஐயா, முன்னால் நன்றாக ஜெபிப்பேன், அழுது
ஜெபிப்பேன். அப்பொழுது என் ஜீவியம் ரொம்ப நன்றாக இருந்தது.
இப்போது எனக்குப் பொறுமையே இல்லை, எதை எடுத்தாலும் கோபம்
வருகிறது, ஜெபிக்கமுடியவில்லையே" என்று சொல்லக்கூடிய நிலைமை
யில் நீ இருக்கிறாய் அல்லவா? ஏன் ஜெபத்தை விட்டுவிட்டாய்? பார்,
உன் ஜெபம் குறையும்போது உன் எல்லா ஆசீர்வாதங்களும் குறைகி
றது. பெற்ற ஆசீர்வாதங்கள் தங்குகிறதில்லை. பெறவேண்டிய ஆசீர்
வாதங்களை நீ பெறமுடியவில்லை. இன்றைக்கு உணர்ந்து திரும்ப
ஜெபத்துக்கு முதலிடம் கொடுப்பாயா?

அநேக குடும்பங்கள் பிரிந்துபோகக் காரணம் என்ன தெரியுமா?
அக்குடும்பத்தாரோ, அல்லது புதிதாகத் திருமணம் செய்த சகோதரனோ,
சகோதரியோ கூடி ஜெபிக்கிறதில்லை. "ஜெபிக்கும் குடும்பத்தார்
இசைந்து வாழ்வார்கள்" (The Family that prays together, stays
together) எத்தனையோ குடும்பங்கள் மனைவியின் கண்ணீர் ஜெபத்தினால்

ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறது. மனைவியின் உபவாசம் குடிகாரனாகிய புருஷனை இரட்சிப்புக்கு வழிநடத்தியிருக்கிறது. ஜெபத்தின் வல்லமையினால் முரட்டு சுபாவமுள்ள புருஷன் சாந்தமுள்ளவனாக மாறியிருக்கிறான். ஜெபத்தின் வல்லமையினால் துடைப்பத்தை வைத்தும், விறகுக் கட்டையை வைத்தும் அடித்த புருஷன் மனைவியோடு சேர்ந்து ஊழியம் செய்கிறதைக் கண்டேன். அல்லேலூயா! உன் குடும்ப சமாதானம் உன் ஜெப ஜீவியத்தைப் பொறுத்து இருக்கிறது. ஆகையால் ஜெபி.

நீ ஏன் தினமும் அழுது கொண்டிருக்கின்றாய்? ஏன் உன்னுடைய முகத்தில் சந்தோஷமேயில்லை? ஒருவேளை உனக்குப் பல பிரச்சினைகள் இருக்கலாம். வியாதி நீங்காமலிருக்கலாம். வேலை கிடைக்காமலிருக்கலாம். தகப்பன் உன்னைக் கைவிட்டிருக்கலாம். தாய் மரித்துப்போயிருக்கலாம். உன் புருஷன் சிறு வயதிலேயே மரித்து நீ விதவையாக மாறியிருக்கலாம். கடன் தொல்லைகள் இருக்கலாம். நீ நேசித்த உன் ஒரே பிள்ளை மரித்திருக்கலாம். உன் கண் பார்வையை நீ இழந்து போயிருக்கலாம். பயப்படாதே. தற்கொலை செய்து கொள்ளாதே. அந்த எண்ணத்தை விட்டு விட்டு, ஜெபித்துப்பார். "இயேசுவே, எனக்கு சமாதானத்தைத் தாரும். இயேசுவே எனக்கு ஓர் நல்ல வழியைக் காட்டும்" என்று கண்ணீரோடு ஜெபி. அப்பொழுது நீ ஓர் அற்புதத்தைக் காண்பாய். எத்தனையோ வருடம் சாப்பிடாமல் அடிக்கடி அழுது கொண்டிருந்த அன்னாளின் துக்க முகத்தை மாற்றின தேவன் (1 சாமு. 1:7, 17, 18) உன்னுடைய கண்ணீரைத் துடைப்பார். உன்னை வாழ்விப்பார். மறந்து போகாதே "நீ இயேசுகிறிஸ்துவுக்காக வாழவேண்டியவன்" ஆகவே, ஒப்புக்கொடுத்து ஜெபி. பொருத்தனை பண்ணி ஜெபி. அதிக நேரம் ஜெபி.

எனக்கு எத்தனை, எத்தனையோ சோதனைகள் வந்தது. எவ்வளவோ கண்ணீர் வடித்திருக்கிறேன், ஆனால், சாட்சியாக நான் எழுத வேண்டுமானால், "கண்ணீரோடு ஜெபிக்க ஆரம்பித்த நான் ஆனந்தக் கண்ணீரோடு ஸ்தோத்தரித்து ஆமென் என்று முடித்திருக்கிறேன்" அல்லேலூயா! இயேசுகிறிஸ்து ஜெபத்தைக் கேட்டார். இயேசுகிறிஸ்து சோதனையின் மேல் வெற்றியைக் கொடுத்தார். திருமணம் செய்யாத நான் விபசாரம் செய்யாதபடிக் காத்துக்கொண்டார். விசுவாசத்தோடு ஊழியம் செய்கிற நான் பணத்திற்காக மாய்மாலம் செய்யாதபடிக் காத்துக்கொண்டார். இயேசுகிறிஸ்து எப்போதும் எனக்குச் செவிகொடுக்கிறார். இயேசுகிறிஸ்து என்னுடைய எல்லா ஜெபங்களையும் அங்கீகரிக்கிறார். இது எத்தனை பெரிய பாக்கியம். ஆகவே, கண்ணீரோடு ஜெபி.

அன்னாள் ஜெபித்தார்கள், பிள்ளை கிடைத்தது. மோசே ஜெபித்தார், மிரியாம் குணமடைந்தாள். ஆபிரகாம் ஜெபித்தார், லோத்து ஆபத்துக்குத் தப்பிக்கொண்டான். ஆயக்காரன் ஜெபித்தான், அவன் நீதிமானாக மாறிவிட்டான். கொர்நேலியு ஜெபித்தார், தேவ தரிசனம் பெற்றார். பேதுரு ஜெபித்தார், தபீத்தாள் உயிரோடு வந்துவிட்டாள்.

யால், ஜெப வரமே எல்லா வரங்களிலும் மேலானது. நன்றாக ஸ்தோத்திரம் பண்ணி ஜெபி. ஒரே மனதோடு ஜெபி. ஊக்கமாய் ஜெபி அப்போது உன் கண்கள் இயேசுகிறிஸ்துவின் சாயலைக் காணும். உன் காதுகள் இயேசுகிறிஸ்துவின் இனிமையான, அமர்ந்த, மெல்லிய, அன்பின் குரலைக் கேட்கும். உன்னுடைய எல்லாப் பிரச்சினைகளும், துக்கமும் துன்பமும் ஒழிந்துபோகும். உன்னதமான கர்த்தர் இயேசு கிறிஸ்து தாமே ஜெப வரத்தை உனக்குத் தந்து, உன்னை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக. அப்படியே ஆவதாக. ஆமென். அல்லேலூயா.

சாது ஜெபராஜ்.

பாவப் பெருக்கில் கிருபைப் பிரவாகம் - 8

(வேசித்தனம், பில்லி சூனியம், தீய ஆவிகளின் கூட்டுறவில் ஜீவித்த ஓர் ஸ்திரீ பரிசுத்தக் கர்த்தரால் மீட்கப்பட்ட ஓர் அற்புத வரலாற்றுச் சித்திரம்)

[அன்புகூர்ந்து ஆகஸ்ட் மாத இதழை மீண்டும் ஒருமுறை நீங்கள் வாசித்த பின்னர் இந்த தொடர் செய்தியினுள் பிரவேசித்தல் நலம் என்று நான் காண்கின்றேன். எதிர்பாராத சில காரணங்களால் செப்டம்பர், அக்டோபர் மாத இதழ்களில் டோரினின் சரிதையைத் தொடர்ச்சியாகப் பிரசுரிக்க இயலாது போயிற்று. அன்புடன் மன்னியுங்கள்] (பத்)

ஹாலோவே சிறைக்கூடத்திலிருந்து வெளியேறிய நான் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் புறப்பட்டேன். ஆனால், அந்தோ! நான் அதனை ஒருக்காலும் கண்டுபிடிக்க முடியவில்லை. புதியவாழ்க்கையைக் கண்டுபிடிக்க எங்கே செல்லுவது? என்ன செய்வது? என்று எனக்கொன்றும் தெரியவில்லை. என் அபிலாஷைகளெல்லாம் காற்றில் பறந்துவிட்டது. நான் தனித்து என்னதான் செய்யக்கூடும்? கடைசியாக, சோஹோவிலுள்ள இரவுவிடுதியும், அங்கு பணிபுரியும் பெண்களுமே என் நினைவிற்கு வந்தனர். ஆம், அதுவே தான் எனது முடிவு என்று எண்ணிக்கொண்டே சோஹோவிற்குச் சென்றேன். சில நாட்களுக்குள்ளாக மின்னும் டயன்னா இரவு விடுதியின் மேடையில் மீண்டும் தோன்றிவிட்டாள். போதையூட்டும் மருந்துகளையும், மாத்திரைகளையும் பழைய பழக்கத்தின்படி உட்கொண்டேன். என் வாழ்க்கை மோசமாகச் சென்றது. ஆனால், நான் எனக்குள்ளே "ஆ, நான் இப்பொழுது மிகவும் கட்டுப்பாட்டிற்குள் என்னைப் பாதுகாத்துகொண்டேன்'' என்று எனக்குள்ளே கூறிக்கொண்டேன். ஆயினும், நான் முதன் முதல் எங்கு ஆரம்பித்து மோசமடைந்து கொண்டு சென்றேனோ அங்கேயேதான் நான் சென்றிருந்தேன். "தெருக்களில் சுற்றியலையும் சிறியபெண்'' என்று என்முகம் முழுவதிலும் முத்திரை பதித்ததைப் போன்றிருந்தது. நெருப்புடன் மீண்டும் விளையாடிக்

கொண்டிருந்தேன். எனது பாதங்களின் கீழ் நான் தலைகீழாக வழுக்கிச் செல்லத்தக்கதான நரகத்தின் வழுக்குப்பாதையிருந்தது.

இந்த நாட்களில் இரட்சண்ய சேனையினர் சோஹோவில் தேவ ஊழியம் செய்வதற்காக வந்திருந்தனர். மிகவும் தேவையுள்ள இடங்களுக்கெல்லாம் நேரடி ஊழியம் மேற்கொள்ள சேனையினர் தங்கள் சக ஊழியர்களை அனுப்பியிருந்தனர். நான் எங்கு செல்லுவதாயினும் அங்கெல்லாம் இரட்சண்ய சேனையினரின் நடமாட்டம் உண்டென்பதைக் கண்டுணர்ந்தேன். மனுக்குலத்தின் மீதுள்ள தேவ அன்பைக் குறித்துப் பணிவோடும், யதார்த்தத்தோடும் அவர்கள் பேசினர். அவர்கள் பேசுவதைக் கவனிக்கும்படியாக நான் நின்றேன். ஆயினும் நீண்ட நேரமல்ல. இந்தச் செய்திகள் இதற்குமுன்பு நான் கேள்விப்பட்டிராத புதுமையான செய்தியா? என் ஓய்வு நாள் பள்ளியில் இதே செய்தியை நான் கேட்டிருக்கின்றேனே! கடந்த காலத்தில் நடந்தது இப்பொழுது என்னை வந்து வேதனைப்படுத்துவதைப் போன்றிருந்தது. இரட்சண்ய சேனையினரின் செய்திகளைக் குறித்து நான் ஆத்திரமடைந்ததுடன் அவர்களைக் குறித்துப் பொறாமையும் கொண்டேன். அவர்கள் அப்படிச் செய்வதற்குத் தகுந்த தேவ நற்குணங்கள் அம்மக்களிடம் உள்ளனவென்று நான் பெருமூச்செறிந்தேன். "ஆயினும் அந்தச் செய்தி எனக்குரியதல்ல. எனது கிருபையின் காலம் கடந்துவிட்டதென்று நான் எனக்குள்ளாக எண்ணிக் கொண்டேன்".

சிற்சில சமயங்களில் இரவு விடுதியின் ஆட்டங்கள் எல்லாம் ஆடி ஓய்ந்தபின் எனது படுக்கையில் உட்கார்ந்து பேரின்ப கீதத்தை எடுத்து அதிலுள்ள பாடல்களை வாசிப்பதுண்டு.

Tell me the Stories of Jesus
Write on my Heart every Word

எத்தனை எளிமையான வார்த்தைகளில் பாடல்கள் உருவாகியுள்ளன. பெருமூச்சுடன் பாட்டுப் புஸ்தகத்தை மூடுவேன்.

"இந்தப் பாடல்கள் எல்லாம் இரட்சண்ய சேனையினருக்குத் தகுந்தவைகள்தான். ஏனெனில், அவர்களின் வாழ்வு என் போன்ற சீரழிந்த வாழ்வல்லவே" என்று நான் கருதினேன்.

இவை எல்லாவற்றின் மத்தியிலும் யாரோ ஒருவர் என்னை நேசிப்பதை உணர்ந்தேன். இரவு விடுதியில் தன் ஆடைகளைக் களைந்து ஆட்டம் ஆடும் ஓர் அசுத்த ஜீவி - ஓர் விலை மாது - அதிகாலையில் பேரின்ப கீதத்தை வாசிக்கின்றாள். மிகவும் ஆச்சரியம். தேவன் அதி அற்புதமான விதத்தில் என்னில் கிரியை நடப்பித்துக் கொண்டிருந்தார்.

எந்த நேரத்திலும் ஒரு சிரிப்பை உருவாக்கிவிடக்கூடிய சிநேகிதி ஒருத்தி இரவு விடுதியில் என்னுடன் பணிபுரிந்து கொண்டிருந்தாள். ஒருநாள் சாயங்காலம் நானும், அவளும் இரட்சண்ய சேனையினர் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்றோம். கூட்டத்தினருக்குப் பின்பக்கம் நாங்கள் இருவரும் உட்கார்ந்து கூட்டத்தின் நட

படிகளைக் குறித்து விமரிசனம் செய்து கொண்டிருந்தோம். இந்தச் சமயம் இரட்சண்ய சேனையின் ஊழியர்களில் ஒருவர் எங்கள் இருவரையும் முன்னுக்கு வந்து தேவ சமூகத்தில் மனத்தாழ்மையோடு முழங்காலூன்றி ஜெபிக்க அன்புடன் அழைத்தார். நாங்கள் முன்னால் முழங்காலூன்றி இருக்கும் வேளையில் கூட்டத்தினர் கீழ்க்கண்ட பொருளமைந்த பாடலைப் பாடிக்கொண்டிருந்தனர்:-

“இருளில் நீ எங்கேயோ நின்று கொண்டிருப்பினும்
இயேசுவை நீ கண்டு கொள்வாய்
உன்னைப்புரிந்து கொள்பவரும் உனக்காய் பரிதாபம் கொள்பவரும்
அவர் ஒருவரே!
இருளில் நீ எங்கேயோ நின்று கொண்டிருப்பினும்
அவரை நீ கண்டு கொள்வாய்.
கரங்களில் ஆணித் தழும்புகள் கொண்ட அவரை நீ
எளிதில் அடையாளம் கண்டு கொள்வாய்!”

மேற்கண்ட பாடலை நான் எனது ஓய்வுநாள் பள்ளியிலும் பாடியிருக்கின்றேன். ஏதோ, சிரித்துக் கேலிபேசி பொழுது போக்கலாம் என்று எண்ணிக்கொண்டு சென்ற நாங்கள் இருவரும் சரியாகச் சிக்கிக் கொண்டோம். இறுதியாகத் தேவன் என்னை நேருக்கு நேர் சந்திப்பதைப் போன்ற உணர்வு எனக்குத் தென்பட்டது. எனினும், நான் கூட்டத்தில் உணர்ந்த எல்லா உணர்ச்சிகளையும் சிரித்துப் புறம்பே தள்ளிக்கொண்டு வெளியேறினேன்.

ஒரு நாள் அதிகாலை இரண்டு மணி சுமாருக்கு ஒரு கரம் என்னைத் தட்டினது. போதையூட்டும் மாத்திரைகளையும், மருந்துகளையும் தின்று எனது உடல் நலனைக் குலைத்திருந்த நான் செத்தவனைப்போல இரவு விடுதியில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தேன். நான் எழும்பிப் பார்த்தபோது இரட்சண்ய சேனையினரின் ஒரு இளம் பெண் என் அருகில் நின்று கொண்டிருந்தாள்.

“மீண்டும் என்னைக் கண்டிப்பாக எழுப்பாதே. மதத்தின் பேரில் எனக்கு எவ்வித நம்பிக்கையும் கிடையாது” என்று கூறிவிட்டுப் படுத்துக்கொண்டேன்.

“இயேசு உங்களை நேசிக்கின்றார். அவர் உங்களுக்காக ஜீவனைக் கொடுத்திருக்கிறார்” என்றாள் அப்பெண்.

“இதோ பார், என்னைத் தொந்தரவு செய்யாதே. எங்கேயாவது நீ தொலைந்து போ” என்று நான் அவளைத் திட்டினேன்.

“நீங்கள் தான் தொலைந்து போயிருக்கின்றீர்கள்” என்று அவள் அன்புடன் மாறுத்தரம் அளித்தாள்.

அவளுடைய எளிமையான வார்த்தைகள் வில்லின் நாணிலிருந்து பாய்ந்த கூர்மையான அம்பைப்போல் என் உள்ளத்திற்குள் தைத்தது.

மெய்தான் அவள் சொன்னது சரியே. நான் தொலைந்து போனேன். பாவ இருளிலும், தனிமையிலும் நான் தொலைந்து போனேன்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த சில ஆண்டு காலத்திற்குப் பின்னர்தான் கர்த்தர் என்னைச் சந்தித்து என்னைத் தமது உடமையாக்கினார். அநேக தடவைகள் மேற்குறிப்பிட்ட இரவு கால சம்பவத்தை மிகவும் துக்கத்துடன் நான் நினைத்ததுண்டு. எனக்குமுன் வைக்கப்பட்டிருந்த மிகவும் ஆச்சரியமான இந்த சந்தர்ப்பத்தை நான் கைநழுவ விட்டுவிட்டமைக்காகப் பின் நாட்களில் நான் மட்டற்ற கிலேசமடைந்ததுண்டு.

.. (அடுத்த இதழில்:- "சாத்தானின் சாம் ராஜ்யத்தில்")

தேவ எக்காளம் - 10 ஆம் ஆண்டு ஸ்தோத்திர மலர்.

கர்த்தரின் மட்டற்ற அன்பால் எக்காளம் தனது 10 ஆண்டு கால தேவ சேவையை அடுத்த மாதத்துடன் முடிக்கின்றது. கர்த்தர் கடந்த பத்தாண்டு காலம் பாராட்டிய தேவ தயவை நினைவுகூரும் வண்ணம் அடுத்து வரவிருக்கும் இதழ் ஓர் சிறப்பான ஸ்தோத்திர மலராக வெளிவரவிருக்கின்றது. 100-க்கும் அதிகமான பக்கங்களையும், படங்களையும், விசேஷித்த தூதுகளையும் இம்மலர் தாங்கி வருகின்றது. இச்சிறப்பான வெளியீட்டைப் பெற்றுக்கொள்ள எவ்விதத்திலும் தவறிவிடாதேயுங்கள். இவ்விதழை அச்சிடுவதற்காகும் செலவு ஒரு பெரிய தொகையாகவிருக்கின்றபடியால், ஆண்டவரின் அன்புள்ள பிள்ளைகளாகிய உங்கள் ஒவ்வொருவரின் மனப்பூர்வமான ஒத்துழைப்பை ஆவலுடன் எதிர்நோக்குகின்றேன். மலர் ஒன்றின் விலை ரூ. 5/- ஆகும். ஒன்றுக்கும் அதிகமான எண்ணிக்கையில் மலர்கள் தேவைப்படுவோர் தேவையான எண்ணிக்கையைக் குறிப்பிட்டு டிசம்பர் மாதம் 10 ஆம் தேதிக்கு முன்னதாகக் கீழ்க்கண்ட அருமை சகோதரனின் முகவரிக்கு எழுதவும்.

வரவிருக்கும் ஸ்தோத்திர மலர் அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கவும், இப்பரிசுத்த பணியில் இராப்பகலாக உழைத்துக் கொண்டிருக்கும் அடிமைக்கு வேண்டிய தேவ ஆலோசனை, தேவ ஞானம், நிறைந்த ஜெப ஆவிக்காக மறவாது ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஸ்தோத்திர மலருக்கான காணிக்கை, முதலியவை அனுப்பவேண்டிய முகவரி:-

Bro. J. RUSSELIAH,
Kotada Estate
Kotada P. O.-643 236

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் மாதாந்திர வெளியீடு. இது இப்பூவுலகின் எந்த ஒரு சபைப்பிரிவையும் சார்ந்த ஒரு பத்திரிக்கையல்ல. ஆண்டுச் சந்தா ரூ. 5/-மட்டுமே. அனுப்பவேண்டிய முகவரி :-

DEVA EKKALAM
Kotagiri - 643217
NILGIRIS : S. India.

நீ தராசிலே நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்பட்டாய்!

(ஒரு முகமதியனின் சொப்பனம்)

"அலிகான், என்ன காரியம், நீங்கள் மிகவும் துக்கத்துடன் காணப்படுகின்றீர்களே? உங்கள் குடும்பத்தில் எவரேனும் நோயுற்றிருக்கின்றனரா?"

அலிகான் ஒரு கண்ணியமுள்ள முகமதியனுவான். மேற்கண்ட கேள்விகளை அவனது நெருங்கிய நண்பனொருவன் அவனிடம் கேட்டான்.

"இல்லை" என்று பதிலளித்தான் அலிகான். "ஒருவரும் சுகயீனமுற்றிருக்கவில்லை. எவ்வித துர் அதிர்ஷ்டமும் எங்களுக்கு நேரிடவுமில்லை. அதற்காகக் கடவுளைத் துதிக்கின்றேன். நான் ஒரு விபரீதமான கனவு கண்டேன். அக்கனவு என்னை வேதனைப்படுத்திக் கொண்டேயிருக்கிறது. எனவே, எனது பெரிய தந்தையிடம் சென்று நான் கண்ட சொப்பனத்தின் தாற்பரியத்தைக் கேட்கப் போகின்றேன்" என்று தொடர்ந்து கூறினுன் அவன்.

"உங்கள் பெரிய தந்தையிடம் சொல்லாமலிருப்பது மிகவும் நல்லது." என்று ஆலோசனை கூறினுன் அலிகானின் நண்பன். "அவர் அநேகக் கிறிஸ்தவப் புத்தகங்களைப் படித்து வருவதுடன் அந்நிய மத போதனைகளையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றுர். உங்களது சொப்பனத்திற்கான என்ன பொருளை அவர் உங்களுக்குக் கூறப்போகின்றுர்?" என்று அவன் தொடர்ந்து கூறினுன்.

"எனது பெரிய தந்தை மிகவும் நல்ல அறிவுரைகளைக் கடந்த காலத்தில் எனக்குக் கூறியிருக்கின்றுர்கள், ஆகவே, அவரிடமே சென்று வருகின்றேன்" என்று கூறிவிட்டுத் தன் பாதையில் சென்றுன் அலிகான்.

பெரிய தகப்பனின் வீட்டையடைந்த அவன் அவரிடம் தனது சொப்பனத்தைக் கூறினுன்.

"எனது சொப்பனத்தில் நான் மரணமடைந்து போனதாகக் கண்டேன். என் உயிரிழந்த சடலத்தை இஸ்லாத்தின் உயரிய சடங்குகளோடு நல்லடக்கம் செய்தனர். இதற்கப்பால் எனது ஆவியை ஏற்றுக்கொள்ள இரண்டு தேவ தூதர்கள் ஆவலுடன் காத்துக்கொண்டு நின்றனர் (மரித்தபின் எனது ஆவியை ஏற்றுக்கொள்ள இரண்டு தேவ தூதர்கள் வருவார்கள் என்று நான் போதிக்கப்பட்டிருந்தேன்.) நான் இப்பொழுது எங்கே நின்றுகொண்டிருக்கின்றேன் என்று எனக்கே தெரியவில்லை. இச்சமயத்தில் ஒரு பிரமாண்டமான தங்கத்தராசை நான் கண்டேன். அதின் முன் வானளாவிநின்று கொண்டிருந்தது. நான் பூவுலகில் செய்த நன்மையும், தீமையுமான செயல்கள் அனைத்தும் இந்தத்துலாக்கோலில் எடையிடப்படப்போகின்றது என்பதை நான்

உணர்ந்து கொண்டேன். தேவதூதர் குழாம் கண்களைக் கூசச்செய்யும் வெண்வஸ்திரங்களைத் தரித்தவர்களாய் ஒருபக்கம் நின்று கொண்டிருந்தனர். எனது நற்செய்கைகளும், புண்ணியக்கிரியைகளும் தராசின் வலது தட்டிலே வைக்கப்படும்பொழுது அதின் எடையானது அதிகரித்துத் தட்டானது கீழே இறங்கும் பட்சத்தில், என்னைப் பரலோகிற்கு அழைத்துச்செல்ல அவர்கள் தயாராய் நின்றுகொண்டிருந்தனர். அதே நேரம், இடது கைப்பக்கத்தில் சாத்தானும் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தான். எனது பாவங்களும், பூவுலகில் நான் செய்த அக்கிரம, அநியாயச் செயல்களும் நற்செய்கைகளைவிட அதிகரிக்கும் பட்சத்தில் என்னைத் தூக்கிக்கொண்டு செல்ல அவன் துடித்துக்கொண்டிருந்தான். சாத்தானைக்குறித்து எனக்குப் பயமெதுவுமில்லை. ஏனெனில், பரலோகம் நிச்சயமாக என் பங்காய்த்தீரும் என்ற உறுதி எனக்கிருந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் சாத்தானின் தூதர்கள் மெல்லிய கருப்புக் காகிதத்தால் மூடிய பெரிய, பெரிய பொட்டலங்களைத் தராசின் இடது தட்டிலே ஏற்றினர். அந்தப் பொட்டலங்களைக் கண்ட மாத்திரத்தில் இவைகளெல்லாம் பூவுலகில் நான் செய்த தீமையான செயல்கள் என்பதனைக் கண்டு கொண்டேன். பொட்டலங்களின் எண்ணிக்கையும், அவற்றின் அளவுகளும் என்னை மிகவும் பயமுறுத்தின. எனது வாலிபத்தின் நாட்களிலே நான் வேடிக்கையாகச் செய்து களி கூர்ந்த பாவங்களும், நீண்ட காலத்திற்கு முன் செய்து மறந்த பழைய பாவங்களும் தராசின் தட்டைக் கீழே செம்மையாகத் தாழ்த்திக் கொண்டே சென்றது. இதைக் கண்ட மாத்திரத்தில் நான் நடுங்கினேன். என்னைக் கண்ட சாத்தான் நான் அவனது இரையாகிவிட்டேன் என்ற ஆனந்தத்தில் ஜெய கெம்பீரமாகக் கொக்கரித்தான்.

" இப்பொழுது அவன் பேசிய தீய வார்த்தைகளைக் கொண்டு வாருங்கள் " என்று சாத்தான் சத்தமிட்டான். இவ்வார்த்தைகளைக் கேட்ட என்னுடைய பீதி இன்னும் அதிகரித்தது. என்னுடைய கோபத்திலும், உபத்திரவத்தின் காரணமாயும் நான் பேசிய வார்த்தைகளை ஒருக்காலும் பாவமாக நான் எண்ணவேயில்லை. அயலகத்தார், அண்டைவீட்டுக்காரர்கள் பேசிய வார்த்தைகளைவிட நான் பேசியவைகள் மிகவும் குறைவாகத்தானிருக்குமென்று உறுதியாக நான் நம்பினேன். நான் பேசிய பரிகாசமான வார்த்தைகள், தகுதியற்ற வார்த்தைகள், கனிவற்ற வார்த்தைகள், மாய்மாலம் நிறைந்த வார்த்தைகள், ஆகாத சம்பாஷணைகள் போன்றவைகள் பலதிறப்பட்டச் சிறியதும், பெரியதுமான பந்துக்களின் உருண்டை வடிவத்தில் காணப்பட்டன. அவற்றின் எடையானது ஈயத்தின் எடையைக் காட்டிலும் அதிகரித்து நின்று தராசின் தட்டை நரக பாதாளத்திற்கு நேராகவே இழுத்துக் கொண்டு செல்லுவதைப்போல் காணப்பட்டது.

ஆனால், இதைவிடப் பயங்கரமான காரியம் என்னவெனில் " இப்பொழுது அவனுடைய அசுத்தமான சிந்தனைகளைக் கொண்டு வாருங்கள் " என்று சாத்தான் தன்னுடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டதுதான்.

"நம்முடைய சிந்தனைகளுக்கும்கூட நாம் பொறுப்பாளிகளா?"

"நிச்சயமாக நாம் பொறுப்பாளிகளே" என்று இடைமறித்தார் அலிகானின் பெரிய தந்தை. "மனுஷனின் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதது" என்று தேவனின் வார்த்தை கூறுகின்றது. மட்டுமல்ல, ஒரு மனிதனை அவனது தீய சிந்தனைகள் நிச்சயமாகக் கறைப்படுத்திவிடும்" என்று அவர் தனது வார்த்தைகளைத் தொடர்ந்து கூறினார்.

ஆனால், அலிகான் தனது சொப்பனத்தைத் தொடர்ந்து சொன்னான். "எனது தீய சிந்தனைகள் சாத்தானின் தூதர்களால் கொண்டு வந்து தட்டிலே வைக்கப்பட்டது. அதை நான் பார்த்தபோது, மேகம் போன்ற எடையற்ற தன்மையதாய்க் காணப்பட்டன. ஆனால், அவற்றைத் தராசிலே போட்டபோது தராசின் தட்டை அதலபாதாளத்துக்கு இழுத்துச் சென்றது. தராசின் இடது தட்டானது அதலபாதாளத்திற்குள் தாழ்ந்து போயிருப்பதைக் கண்ட மாத்திரமே நான் தன்னறிவிழந்து கீழே விழுந்திருக்கவேண்டியவனாயினும், நான் செய்திருந்த நற்கிரியைகள், நல் வார்த்தைகள், தூய சிந்தனைகள் போன்றவைகள் நம்முடைய கணக்கிலே ஏராளமாயிருப்பதால், அவற்றை வலதுபுறம் வைத்தால் அதின் எடை மிதமிஞ்சிப் போகும் என்ற நப்பாசையின் காரணமாக உற்சாகத்துடனிருந்தேன்.

"துரிதப்படுங்கள், துரிதப்படுங்கள், எனது புண்ணியச்செயல்கள் எனது நல் வார்த்தைகள், எனது ஜெபங்கள், என் தான தருமங்கள் எல்லாவற்றையும் இப்பொழுது கொண்டு வந்து தராசிலே வையுங்கள்" என்று வெண் வஸ்திரம் தரித்த தேவ தூதர்களுக்கு நான் உத்தரவிட்டேன்.

அவர்கள் உடனடியாக எனது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து வெண்மையால் மூடப்பட்டச் சில பொட்டலங்களைச் சோகமான முகத்துடன் மெதுவாகக் கொண்டு வந்தனர். தேவ தூதர்களின் பிரதான தூதன் என்னைப் பார்த்து "கடவுளின் மேலுள்ள அன்பின் ஏவுதலால் செய்யப்பட்டக் கிரியைகள் மாத்திரமே பழுவுடையதாயிருக்கும், மற்றபடி சுய நோக்கத்துடனும், தற்புகழ்ச்சிக்காகச் செய்யப்பட்டவைகள் அனைத்தும் இறகின் (Feather) எடையிலும் குறைவான எடையுள்ளவைகளாகவேயிருக்குமென்று சொன்னான்".

கொண்டுவரப்பட்டப் பொட்டலங்கள் தராசின் தட்டிலே வைக்கப்பட்டன. அந்தோ! எனது அனைத்துப் பொட்டலங்களை வைத்தும் தட்டு எவ்வித இயக்கமுமின்றி அப்படியேதான் நின்றுகொண்டிருந்தது. எனது நோன்புகள் எனது புனித தீர்த்தங்கள் (Ablutions) எல்லாம் எவ்வித எடையுமற்ற நிலையிலேயேயிருந்தன.

"ஆனால், எனது ஜெபங்கள் எங்கே? என்று நான் குழப்பமுற்றவனாய்க் கூச்சலிட்டேன். ஐம்பது ஆண்டு காலமாகத் தினமும் ஐந்து தடவைகள் நான் ஜெபித்தேனே! எனது தீய வார்த்தைகளே மிகவும் பழுவான எடையுடையவைகளாக இருக்கும்போது, வெகு நிச்சயமாகவே

எனது ஜெபங்கள் என்ற நற்செய்கைகள் பழுவான எடையைக் காண்பிக்கும்'' என்று நான் கூறிக்கொண்டேன். ஆனால், இதையும் நான் தவறுதலாகக் கணக்கிட்டிருந்தேன். தேவதூதர்கள் எனது ஜெபங்கள் எல்லாவற்றையும் வெண்மை நிறப் பொட்டலங்களாகக் கொண்டு வந்தனர். அவர்கள் அவற்றைச் சாத்தானின் தூதர்களுக்குக் கொடுத்தனர். அவர்கள் அவற்றைத் தொட்டவுடனே அவைகளின் வெண்மை நிறம் மாறி அவை அனைத்தும் கருமையாக மாறிற்று. கருமை நிறமாக மாற்றமடைந்த அப்பொட்டலங்கள் யாவற்றையும் தீய பொட்டலங்களிருந்த இடது தட்டிலேயே கொட்டினர். இது என் பயத்தை இன்னும் அதிகரிக்கப் பண்ணிற்று.

"நான் இதின் கருத்தை உனக்கு வியாக்கியானம் செய்கின்றேன்'' என்று அலிகானின் பெரியதந்தை அமைதியாகக் கூறினர். "இந்நாள் வரை நீ கடவுளின் நாமத்தைப் பெருமையோடும், கறைப்பட்ட நெஞ்சத்தோடும், மாயையான நோக்கத்தோடும் நினைத்து ஜெபித்தாய், இது பாவமாகும்.''

"சரி, அலிகான் வேறு எதனை நீ உன் சொப்பனத்தில் கண்டாய்?''

"கடைசியாகத் தீய ஆவிகள் எரி நரகில் என்னை இழுத்துத்தள்ளுவதற்காகத் தங்கள் கோரமான கரங்களை என்னிடமாய் நீட்டி என்னைப்பற்றிப்பிடிக்க முயற்சித்தன. நான் நடு, நடுங்கி அலறி, அங்கலாய்த்துக்கோவென்று கதறினேன். இந்த பயங்கரமான வேளை நான் என் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டேன். அதை நினைத்தால் என் உடலும், உள்ளமும் இப்பொழுதும் நடுங்குகின்றது''

"நானும்கூட உன்னைப்போல விழித்துக்கொண்டேன்.'' என்றார் அலிகானின் பெரிய தந்தை.

"சற்றேறக் குறைய நீ கொண்டிருக்கின்ற அனுபவத்தைப்போலவே நானும் ஒரு அனுபவத்தை உடையவனாயிருக்கின்றேன் அந்த அனுபவத்தின் மூலமாகச் சத்தியத்தை நான் கண்டு கொண்டேன். அது ஒரு சொப்பனமல்ல. எனது எல்லாக் கிரியைகளும், வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் நினைவுகளும் சத்தியத்தின் வெளிச்சத்தில் ஓர் நாள் அலசப்பட்டது. அவ்வேளையில் நான் அதிர்ச்சியடையத்தக்க விதமாக "நீ தராசிலே நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்பட்டாய்'' என்ற தேவனின் வார்த்தைகளை நான் கேட்டேன். அப்பொழுது, தராசின் வலது தட்டிலே எனது நீதியின் எடையாக வைக்கத்தக்கது ஒன்றுமில்லையென்று நான் கண்டுணர்ந்தேன்''.

"அப்படியானால், எல்லா மனிதரும் நரக பாதாளத்தை நோக்கிச் செல்லுகின்ற தராசின் இடது தட்டுடனேயே சென்று அழியவேண்டியதேயன்றி வேறு மீட்சி இல்லையா? பாவங்களைக் காட்டிலும் நிறைவான எடையை வலது தட்டிலே வைக்க நம்மால் இயலாதா?'' என்று அலிகான் ஆச்சரியமுற்றவனாய் அவரை வினவினன்.

"மெய்யாகவே இருக்கின்றது'' பெரிய தந்தை அவனுக்குப் பதிற்கூறத் துரிதப்பட்டார்.

"நித்திய வேதனையை அனுபவிக்க வேண்டுமென்று ஆண்டவரால் நாம் முத்திரையிடப்பட்டவர்களல்ல. தேவ குமாரனுகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இ ர த் த ம் எனது பாவப்பாழவான சுமைமினிமித்தமாகக் கல்வாரியில் செலுத்தப்பட்டுவிட்டது. நான் இதை இதய பூர்வமாக விசுவாசித்துக் கர்த்தராகிய இயேசு இரட்சகரை என் சொந்த மீட்பராக ஏற்றுக்கொண்டபோது தராசின் வலதுதட்டு கிடு, கிடுவென்று கீழே இறங்கி, இடதுதட்டு வெறுமையாகப் பரிதாபத்துடன் மேலே சென்றது. மெய்யாகவே, தேவகுமாரன் பாவிகளுக்காகக் கல்வாரியில் சிந்திய இரத்தத்தால் நித்தியமீட்பு உள்ளது."

இதைக்கேட்ட அலிகான் ஆனந்தத்தால் துள்ளிக்குதித்தான்.

"நல்லது, என் அன்பான தந்தையே நீங்கள் ஓர் கிறிஸ்தவனுக இருத்தல் கூடுமோ?" வென்று அவன் ஆச்சரியமுடையோனுய்க் கேட்டான்.

"நிச்சயமாகவேதான்" அவர் பதிலளித்தார். "தேவனுடைய வார்த்தையும், எனது மனச்சாட்சியும் என்னைக் குற்றப்படுத்திய பாவங்களைத் தேவ குமாரனுகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அகற்றிவிட்டதென்று தேவ கிருபையின்படி நான் விசுவாசிக்கிறேன். நான் ஒரு கிறிஸ்தவனே".

தனது பெரிய தந்தையைப்போலவே அலிகானும் ஒரு கிறிஸ்தவனுக மாறியிருப்பான் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் அதைக் குறித்து நமக்கொன்றும் தெரியாது. எனினும், அழிவின் குழியிலிருந்து தூக்கி எடுப்பதற்காகச் சொப்பனங்கள் மூலமாகவும், இராத்தரிசனங்கள் மூலமாகவும் தேவன் தமது ஜனங்களுடன் நிச்சயமாகவே பேசி வருகின்றுர் என்பதை நாமறிவோம்.

ஸ்தோத்திர மலர் யாருக்கு?

எக்காளத்தின் சந்தாப்பட்டியலிலுள்ள அனைத்துச் சந்தாதார்களுக்கும் ஸ்தோத்திர மலர் அனுப்பவேண்டுமென்பதே கர்த்தருக்குள்ளான என் அன்பின் ஆவல். கிருபை நிறைந்த ஆண்டவர் அதற்கான அனுகூலங்களை வாய்க்கப்பண்ணும் பட்சத்தில் எல்லாருக்கும் மலர்களை முற்றும் இலவசமாக அனுப்பித்தருகின்றேன். ஒருக்கால், போதுமான பண வசதியின்றிக் குறைந்த எண்ணிக்கையில் மாத்திரமே மலர்கள் அச்சிட நிர்ப்பந்திக்கப்படும் பட்சத்தில் கீழ்க்கண்ட காரியங்களைக் கவனத்தில் கொண்டே மலர்கள் அனுப்பப்படும். உங்கள் மலரைப் பெற்றுக்கொள்ள இன்றே ஊர்ஜிதம் செய்து கொள்ளுங்கள் :-

(1) சந்தா பாக்கி உள்ளதா?

(2) ஆண்டுதோறும் தனது சந்தாவை ஒழுங்காகப் புதுப்பித்து வந்திருக்கின்றுர்களா?

(3) சந்தாவிற்கு மேலாக எப்பொழுதாவது ஓர் தடவையாயினும் ஓர் சிறிய காணிக்கை அனுப்பியிருக்கின்றுர்களா?

(பத்)

தந்தை சொல்லத் தனயன் கேட்டது.

(மனதுருகிய கள்ளர்கள்)

(படத்தில் நீங்கள் காண்பது விருத்தாப்பிய வயதினரான என் பக்தி யுள்ள தந்தையாவார்கள். தனது ஒரே ஒரு ஆண்பிள்ளையாகிய எனக்கு இவ்வுலகில் அவர்கள் சேர்த்துவைத்த சொத்து, சுகம், ஆஸ்தி, ஐசுவரி யம் ஒரு செப்புக்காசு தானுமில்லை. ஆனால், அன்புள்ள ஆண்டவரை ஸ்தோத்தரிக்கின்றேன். ஒரு பரம ஞானமுள்ள தகப்பன் இவ்வுலகில்

தன் அருமைப் பிள்ளைக்கு அளிக்கக் கூடிய நிறைவான அரும்பெரும் செல்வபாக்கியம் அனைத்தையும் அவர்கள் எனக்களித்துவிட்டார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை - குறைவற்ற பூரண செல்வக் களஞ்சி யத்தை அரும் பெரும் பரலோக பொக்கிஷத்தை - நித்திய ஜீவனின் நிறைவான பேரின்பப் பெட்டகத்தை நான் சுதந்தரித்துக்கொள்ள என்னை நீதியின் பாதையில் வெற்றியோடு வழிநடத்தி விட்டார்கள். அப்பாவு டைய கிறிஸ்தவ ஜீவியம் சுவை யான அநேக தேவ நடத்துதல்கள் நிறைந்த ஒரு ஜீவியமாகும். தேவ நாமத்திற்கு மகிமையாக ஓர் சம்பவத்தை உங்களுடன் பரிமாற்றம் செய்துகொள்ள விரும்புகின்றேன் – பத்)

எங்கள் ஊருக்கு அருகாமையில் குதிரைமொழித்தேரி என்று ஒரு வனச்சரகம் உண்டு. இக்காட்டுப்பகுதியைக் கடந்தேதான் பக்கத்தி லுள்ள கிராமத்திற்குச் செல்லவேண்டும். அக்கிராமத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை சந்தைகூடும். காட்டைக்கடந்து சந்தைக்குச்செல் லும் கிராமவாசிகளை வேளாவேளைகளில் கள்ளர்கள் மறைந்திருந்து தாக்கி அவர்கள் பணத்தையும், பொருட்களையும் திருடிச்சென்று விடு வார்கள்

ஒரு செவ்வாய்க்கிழமை எனது தகப்பனார் மேற்குறிப்பிட்ட கிராமச் சந்தையிலிருந்து சாமான்கள் வாங்கிக்கொண்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்திருக்கின்றார்கள். பொழுது சென்று சூரியன் அஸ்தமித்து விட்டது காட்டுப் பகுதியினுள் சற்றுதூரம் வந்தபின்னர் மழைத்தண் ணீர் ஓடிச்சென்று நல்ல காய்ந்த நிலப்பரப்பை ஏற்படுத்தியிருந்த ஓர் பள்ளமான ஓடையில் தனது பொருட்களைப் பக்கத்தில் வைத்து விட்டு முழங்காலூன்றி "அன்புள்ள ஆண்டவரே, பொழுது அஸ்தமித்துவிட்

டது. இக்கானகம் திருடர்கள் பயமுள்ளது. நான் தனியனுய்ச் செல்லு கின்றேன். என்னைப் பாதுகாத்துக் கொள்ளும். தேவரீர் தமது தேவ தூதர்களை எனது பாதுகாவலுக்காக அனுப்பும்" என்று ஜெபித்த பின்னர் சாமான்களை எடுத்துக்கொண்டு ஓடையிலிருந்து ஏறி சற்றுதூரம் வரவும் தங்கள் கரங்களில் கூர்மையான அரிவாள்களை ஏந்தினவர்களாய் இரண்டு திருடர்கள் கரிய உருவத்துடன் நின்று கொண்டிருந்திருக்கின்றனர். திருடர்களைக் கண்டதும் அப்பாவுக்குக் கலக்கம் உண்டாயிற்று. எனினும், துணிவுடன் முன்னேக்கி நடந்து சென்றிருக்கின்ருர்கள். திருடர்கள் இருவரும் அப்பாவை நோக்கிப் "பெரியவரே, ஓடையில் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று வினவியிருக்கின்றனர்.

"சூரியன் மறைந்து பொழுது சென்றுவிட்டபடியால், இக்காட்டில் தனித்துச் செல்லும் எனக்குத் தேவையான பாதுகாவலைத் தந்தருள என் ஆண்டவரை நோக்கி ஜெபம் செய்தேன்" என்று தந்தை மாறுத்தரம் அளித்திருக்கின்ருர்கள். இதைக் கேட்ட அத்திருடர்களின் உள்ளம் உருகிற்று. அப்பாவுடைய பொருட்களைத் திருடவேண்டுமென்ற ஆசை அவர்களிடமிருந்து முற்றும் மறைந்துவிட்டது. "சரி நீங்கள் போகலாம்" என்று அவர்கள் அப்பாவிடம் கூறியிருக்கின்ருர்கள்

"ஐயா, நீங்கள் இருவரும் இவ்விருட்டு நேரம் இங்கே ஏன் நின்று கொண்டிருக்கின்றீர்கள்?" என்று கள்ளர்களிடம் அப்பா திருப்பிக் கேட்டிருக்கின்ருர்கள்.

"எங்கள் வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாமையால்தான் இங்கே நின்று கொண்டிருக்கின்றோம்" என்று அவர்கள் மாறுத்தரம் அளித்திருக்கின்ருர்கள்

கர்த்தர் எத்தனை அதிசயமானவர்! ஜெபம், மனுஷீக வாழ்வில் எத்தகைய அற்புதத்தை நிகழ்த்துகின்றதென்று பாருங்கள். ஜெபம் என்ற இந்த அற்புத சஞ்சீவியை உங்கள் தனிப்பட்ட ஜீவியத்தின் ஒவ்வொரு கோணத்திலும் செயல்படுத்தி நிறைவான தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிடாதேயுங்கள்.

N. சாமுவேல்.

இமயமலை ஊழியச் செய்திகள் - 9

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

ஒரு நாள் சுவிசேஷ ஊழியத்தின் பாதையில் ராயவாலா (Rayawala) என்ற இடத்திற்கு நான் மட்டும் தனித்துச் சென்றிருந்தேன். ராயவாலா என்ற இடம் ஹரித்துவாரத்துக்கும், டேராடூனுக்கும் இடையில் உள்ள ஒரு சிறிய கிராமமாகும். இக்கிராமத்திலிருந்து சற்று தூரத்தில் இந்திய ராணுவக் கேந்திரம் ஒன்று உள்ளது. இரயில் நிலையத்திலேயே இராணுவத்தினரை நாம் காணலாம். இவ்விடத்திற்கு வந்த நான் ஒரு சில தென்னிந்திய சிப்பாய்களுக்கு இயேசு இரட்சகரைப்பற்றிக் கூறித் துண்டுப் பிரதிகளையும் விநியோகிக்கக் கர்த்தர் உதவி செய்தார். சில முகமதியர்களுக்கும் பிரசுரங்களை வழங்கினேன். இதற்கப்பால் பஸ் செல்

லும் மார்க்கத்தின் வழியாகக் கால்நடையாகவே சற்றுதூரம் வந்து ரஸ்தா ஓரத்தில் கிடந்த மரம் ஒன்றின்மீது உட்கார்ந்து கொண்டே வழிப்போக்கர்களுக்குக் கைப்பிரதிகளைக் கொடுத்துக் கொண்டிருந்தேன். மக்கள் சந்தோஷத்துடன் அவற்றை வாங்கிப் படித்துக்கொண்டே சென்றனர். கொடுக்கும் சுவிசேஷப் பிரதிகளை மக்கள் வாங்கிவிட்டாலே போதும், உள்ளத்தில் ஒரு பெரிய சந்தோஷம் உண்டாகிவிடும். இப்படி நான் விநியோகித்துக் கொண்டிருக்கும் வேளையில், ஒரு வாலிபன் வந்து என்னைத் தன்னுடன் வரும்படி அழைத்தான். நான் அவனுடன் சென்றேன். இறுதியில், அவன் என்னை அருகாமையிலிருந்த வயலுக்கு அழைத்துச் சென்றான். வயலிலே உயரமான மக்காச்சோளப் பயிர்கள் வளர்ந்து கதிர்கள் அறுவடைக்குத் தயாராயிருந்தன. வயலிலே ஒரு வீடு இருந்தது. அதினுள்ளே வயலின் முதலாளி உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் என்னைத் தம்மண்டை அமரச்சொல்லி என்னைப்பற்றிய விபரங்களைக் கேட்டார். அவர் எழுப்பிய எல்லாக் கேள்விகளுக்கும் பதிற் கூறினேன். பணம் பெற்று பணத்திற்காக ஆண்டவரின் பிரசாரத்தை நான் செய்ய அவ்விடத்திற்கு வந்திருப்பதாக அவர் யூகித்துக் கொண்டார். பணத்திற்காகப் பணிபுரியும் அந்நிய நாட்டினனின் கைக்கூலி என்றெல்லாம் முதலில் அவர் என்னைப் பேசினார். எல்லாவற்றையும் சிரித்துக்கொண்டே அன்புடன் கேட்டுக் கொண்டேயிருந்தேன். நான் அவருக்கு உண்மையை விளக்கப் பெரும்பாடு படவேண்டியதாயிருந்தது. அம்மனிதனோடு நான் பேசிக்கொண்டிருந்தாலும் என் இருதயம் கர்த்தரோடு தொடர்பு வைத்துக்கொண்டேயிருந்தது. தெய்வ நாமத்திற்கு விரோதமாகப் பேசும் சத்துருவின் அரண்களை உடைத்து நிர்மூலமாக்குவதற்கேற்ற தேவ கிருபைகள் பரத்திலிருந்து எனக்கு அருளப்பட்டுக் கொண்டேயிருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஒருவாறு அம்மனிதனை ஒரு சமாதான நிலைக்குக்கொண்டு வந்ததற்கப்பால் தேவ ஒத்தாசையுடன் கர்த்தர் இயேசு எனக்களித்துள்ள பரலோக சமாதானத்தையும், சந்தோஷத்தையும், அவர் என் உள்ளத்தில் சதாகாலமும் வாசம் செய்வதையும் அவருக்கு விளக்கினேன். கர்த்தர் கிரியை செய்ய ஆரம்பித்தார். அம்மனிதன் திகைப்புற்று அமைதியாக விருந்தார். அவர் கையிலே சிகரெட் ஒன்று புகைந்துகொண்டிருந்தது. அதைச் சுட்டிக் காண்பித்து, "என்னுடைய தேவன் பரிசுத்தமுள்ளவர், இவ்வித அசுத்தங்களை அவர் ஒருபோதும் விரும்புவதில்லை" என்றேன். அவ்வளவுதான், புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை வீசி எறிந்தார். நான் சொன்ன சத்தியங்களையெல்லாம் மிக ஆவலுடன் கேட்டார். கர்த்தர் அவர் உள்ளத்தில் திட்டமாகக் கிரியை செய்ததை உணர்ந்தேன். இறுதியில், ஆண்டவரைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவதாக என்னிடம் உறுதி கூறினார். அநேக மைல்கள் தொலைவிலுள்ள தன் கிராமத்திற்கு வந்து தன் கிராம வாசிகளுக்கு ஆண்டவரைப்பற்றி அவர்களிடமும் கூற என்னை அன்புடன் அழைத்தார். அவர் வீட்டிலேயே நான் தங்கி ஊழியம் செய்யலாம் என்றும், அதற்கான எல்லா ஏற்பாடுகளையும், தானே, செய்து தருவதாகவும்

அவர் கூறினர். வலுக்கட்டாயமாக அவர் என்னை அழைத்தார். பக்கத்துக் கிராமமாயின் செல்லலாம், ஆனால் வெகு தூரத்திற்குச் செல்ல வேண்டியதாயிருந்தமையால் அவருடைய விருப்பத்திற்கு இணக்கம் தெரிவிக்கக் கூடாமற் போயிற்று. நான், கடைசியில் அம்மனிதனிடமிருந்து விடைபெறுவதே ஒரு சோகக் காட்சியாயிருந்தது. நான் புறப்படும் சமயம் தனது வேலைக்காரனிடம் சொல்லிச் சில சோளக்கதிர்களைக் கொய்து என்னிடம் தந்தார். இக்கதிர்களை ஹரித்துவாரத்தில் அன்றிரவு நாங்கள் மகிழ்ச்சியுடன் புசித்தோம். கர்த்தர் இந்த ஆத்துமாவுடன் தொடர்ந்து கிரியை நடப்பிக்க தயவு செய்து ஜெபித்துக் கொள்ளுங்கள். இறுதியாக, அவர் எனது ஹிந்தி புதிய ஏற்பாட்டை மிக ஆவலுடன் கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

வட இந்திய சுவிசேஷ ஊழியங்களை நான் முடித்துக்கொண்டு திரும்புவதற்காக ஆயத்தமானேன். ஹரித்துவாரத்தில் எங்களின் கடைசி நாள். நான் அடுத்த நாள் காலையில் தன்னைவிட்டுப் பிரிந்து செல்லுவதை எண்ணிய அன்புத் தம்பி சாதுவின் கண்கள் கலங்கியது. குழந்தை உள்ளம் கொண்ட அவர்களைக் கண்ணுற்ற என் உள்ளமும் எனக்குள் சஞ்சலமுற்றுத் தவித்தது. புறப்படுவதற்கு முந்திய நாள் மழை, கொட்டு, கொட்டென்று கொட்டினது. உயரமான தேவ ஆலயத் தகரக் கூரையில் மழை பெய்யும் சப்தம் நள்ளிரவில் எனக்குச் சற்று அச்சத்தை அளித்தது. ஏனெனில், பழுதான நிலையிலிருந்த அவ்வாலயம் இடிந்து விழுந்து விடுமோவென்று நான் எண்ணினேன். மழை இன்னும் அதிகமாகப் பெய்தபோது நானும், தம்பியும் ஒன்றுகவே மோட்சம் செல்லும் நாள் இதுவே என்று நான் என் தூக்கமயக்கத்தில் எண்ணினேன். ஆலயத்தில் அநேக இடங்களில் மழைத்தண்ணீர் ஒழுகி ஆங்காங்கு தண்ணீர் தேங்கிக் கிடந்தது. காலையில் பார்த்தபோது முந்தின இரவு மழை பெய்ததோ வென்ற சந்தேகமும் உண்டாகத்தக்க விதமாக நிலப்பரப்பு தென்பட்டது.

நாங்கள் இருவரும் வழக்கம்போல் அதிகாலையில் எழுந்து ரிஷிகேசம், ஹரித்துவாரம், மற்றும் சுற்றுப்புறங்கள் அனைத்திலும் செய்யப்பட்ட எல்லா ஊழியங்களையும் தேவ சமூகத்தில் ஒப்புவித்து ஜெபித்துவிட்டுப் புறப்பட்டோம். ஹரித்துவாரம் ரயில் நிலையத்திலிருந்து நான் டில்லி நோக்கி வந்தேன். தம்பி இமயம் நோக்கி டேராடுன் பட்டணத்திற்கு ஊழியத்தின் பொருட்டுச் சென்றூர்கள். நாங்கள் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து சென்றது உள்ளத்தை உடைப்பதாயிருந்தது. தம்பியின் கண்கள் கலங்கினதை நான் கண்டேன்.

நான் தெற்கு நோக்கி வந்ததன் பின்னர் தம்பி சாது அவர்கள் குருக்ஷேத்திரம், முஸாபர் நகர், டில்லி போன்ற அநேக வட இந்திய பட்டணங்களில் ஊழியம் செய்ததாகக் கூறினூர்கள். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

அன்பின் கர்த்தர் ஏழைப் பரதேசிகளாகிய எங்களைக் கொண்டு நிறைவேற்றிய எல்லா ஊழியங்களையும், விநியோகிக்கப்பட்ட பல நூற்

றுக்கணக்கான சுவிசேஷத் துண்டுப்பிரதிகள் தொடர்ந்து மக்கள் உள்ளங்களில் கிரியை நடப்பிக்கவும், மக்கள் மனந்திரும்பவும், அன்புடன் ஜெபித்துக் கொள்ளுங்கள். இப்படிப்பட்ட ஊழியங்களை உங்கள் ஜெபங்களாலும் பொருளாலும் தாங்கி ஆதரிக்கும் உங்களுக்கும் பரலோகில் மிகுந்த பலன் உண்டு என்பதை நித்தியம் ஏற்ற காலத்தில் வெளிப்படுத்தும். (முற்றும்) N. சாமுவேல்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றேன். தேவாலயத்தின் கதவுகள் திறந்திருந்தன. ஆசாரியனாகிய ஏலி வாசல் நிலையண்டை உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரையும் நோக்காமல் நேராக உள்ளே சென்று தேவனின் பாதபடியில் விழுந்தேன். விழுந்து மனங்கசந்து மிகவும் அழுதேன். என் கண்களிலிருந்து கண்ணீர் ஆறுய்ப் பெருகி ஓடிக்கொண்டேயிருந்தது. என் இதயத்தில் இதுகாறும் தேங்கிக் கிடந்த கவலைகளையும், என் சக்களத்தி பேசிய கடினமான சொற்கள் ஒவ்வொன்றையும், அவைகள் பேசப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நினைத்து தேவசமூகத்தில் வாய்விட்டுக் கூறினேன். மட்டுமல்ல, நீர் எனக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால் அந்தமகனை உமக்கே நான் திரும்பத்தந்துவிடுவேன். அவன் எனக்குரியவனல்ல, தேவரீருக்கே உரியவனாயிருப்பான் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனை உமக்கே ஒப்புக்கொடுப்பேன். அவன் தலையின்மேல் சவரகன்கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனையும் உடப்பண்ணிக்கொண்டேன். இதற்கப்பால், நான் என் இருதயத்தை தேவசமூகத்தின் வெளிச்சத்தில்வைத்து சோதித்து ஆராய்ந்தேன். இறுதியில் என் கர்த்தாவுக்கு விரோதமாக நான் எவ்வித துரோகமும் கொடியபாதகமும் செய்யவில்லையென்று திட்டமாக நான் கண்டேன். அவ்வேளை அன்பின் தேவன் "என் மகளே, உன்னில் பாவமில்லையென்று நான் அறிவேன். நானே இதுவரை உன் கர்ப்பத்தை அடைத்திருந்தேன், ஏனெனில், உனது இருதயத்தை உடைத்து ஊற்றிய இந்தவேளையை உண்டாக்கவே நான் தாமதித்தேன்" என்றார். என் இருதயம் எனக்குள் களிகூர்ந்தது. இவ்வேளை தேவன் தமது சொல்லிமுடியாத தேவ சமாதானத்தை என் உள்ளத்தில் ஊற்றி என்னை நிரப்பிவிட்டார். என் துக்கம்மாறி, கவலைகளும், கண்ணீரும் மறைநது போயிற்று. கர்த்தர் எனக்கு ஒரு குழந்தையைத் தந்துவிட்டார் என்ற முழு நிச்சயத்தோடு நான் என் முழங்கால்களிலிருந்து எழுந்து கர்த்தரைத் துதித்துக்கொண்டு சென்றேன். அதற்கப்பால் நான் துக்கமுடையவளாயிருக்கவில்லை. இதன் பின்னர், சரியாக ஒரு உற்பவ காலத்திட்டத்தில் நான் உன்னைப் பெற்றெடுத்தேன். நீ என் வயிற்றில் இருந்த நாளெல்லாம் என் இருதயத்தில் ஒரு தனிப்பட்ட சமாதானத்தையும், மனமகிழ்ச்சியையும் தேவ பிரசன்னத்தையும் நான் கண்டடைந்தேன். நிச்சயமாகத் தேவன் உன்னைக்கொண்டு தமது ஜனத்திற்கு ஒரு பெரிய காரியத்தைச் செய்யப்போகின்றார் என்ற பூரண நிச்சயம் எனக்கிருக்கின்றது.

ஆ, என் அன்புள்ள மகனே, கர்த்தர் எத்தனை நல்லவர். அவரைப் போல பரிசுத்தமுள்ள தேவன் ஒருவருமில்லை. அவரைப்போல் கன்மலையு

யில்லை. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்: அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார். அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார். இப்படிப்பட்ட மாபெரும் தேவனை உன் ஜீவகால பரியந்தம் உண்மையும், உத்தமுமாய்ச் சேவித்து அவருக்குக் கீழ்ப்படிந்து அவரில் அன்பு கூருவாயாக. அவரே உன் நித்திய கன்மலையாவார். (பத்)

உங்கள் சந்தாவைப் புதுப்பித்து விட்டீர்களா?

எக்காளத்தின் சந்தாப்பட்டியலைச் சமீபத்தில் நான் கவனித்த போது அநேகர் தங்கள் சந்தாக்களை இன்னும் புதுப்பிக்காமலிருப்பதைக் காண்கின்றேன். பிரதிமாதமும் பத்திரிக்கையை அச்சிட்டு வெளியிட ஒரு கணிசமான தொகை நமக்குத் தேவை என்பதை நாம் நன்கறிவோம். அச்சுக் கூடத்தினருக்கு நாம் எவ்விதத்திலும் கடன்பட இயலாதவர்களாயிருக்கின்றோம். மட்டுமல்ல, அச்சகத்தினரும் கடன்பாரம் ஏற்கச் சற்றும் திறனற்றவர்களாயிருக்கின்றனர். இந்நிலையில், நீங்கள் அன்புடன் உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். தொடர்ந்து நீங்கள் அமைதியாகவிருந்தால், தேவ கிருபையால், நாளுக்கு நாள் பெருகிவரும் புதிய சந்தாதார்கள் உங்கள் இடத்தை நிரப்பக் காத்திருக்கின்றனர் என்பதை அன்பாக நினைவுபடுத்த விரும்புகின்றேன். எக்காளத்தின் சந்தாதார் பட்டியலிலிருந்து உங்கள் பெயரை [illegible] என்பது எனக்கு மிகவும் கஷ்டமான ஒரு அனுபவமாயிருக்கின்றது. இது ஒரு தேவ ஊழியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அநேக ஆத்துமாக்கள் இதினால் ஆவிக்குரிய அனந்த நன்மைகளை அடைந்து வருகின்றனர். தேவனின் கனமானதும், விலைமதிப்பிட முடியாததுமான பரிசுத்த ஊழியம் உங்கள் நிமித்தம் தடைபடாமலிருக்க உங்கள் சந்தாக்களைத் தாமதமின்றிப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். (பத்)

ஓர் அன்பின் அறிவிப்பு

தேவ எக்காளம் ஸ்தோத்திரமலருக்கான எழுத்துவேலைகள் மிகவும் ஏராளமாயிருப்பதால் நாம் எதிர்பார்த்தவாறு மலரை டிசம்பர் மாதம் கொண்டுவருதல் கூடாததென்று காண்கின்றேன். கர்த்தர் கிருபை கூர்ந்தால் புத்தாண்டில் உங்கள் அன்பின் கரங்களை வந்தடையும். இதின் காரணமாக டிசம்பர் 1977 தேவ எக்காளம் வெளிவராது என்பதனை அன்புடன் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். (பத்)

பரிசுத்தஆவியானவர் அருமைத்தம்பி சாது அவர்கள் மூலமாக "ஜெபவரம்" என்ற தலைப்பில் ஓர் ஆசீர்வாதமான செய்தியை இம்மாத இதழில் நமக்களித்திருக்கின்றார். அன்புகூர்ந்து மேற்கண்ட செய்தியை ஜெபத்துடன் வாசித்துத் தனிப்பட்ட உங்கள் ஜீவியத்தில் தேவஒத்தாசையுடன் செயல்படுத்தத் தவறாதீர்கள்.

Printed at the Thoothan Press, Newport Street, Nagercoil
Published by the Editor N. Samuel,
Kotagiri - 643217, Nilgiris.